## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(07.05.2022 முதல் 11.05.2022)

**அறிக்கை எண்: 36/2022** **தேதி :06.05.2022**

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 °செ முதல் 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 29 °செ ஆகவும் பதிவானது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (07.05.2022 முதல் 11.05.2022)

| கடந்த வார வானிலை (02.05.2022 முதல் 05.05.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (07.05.2022 முதல் 11.05.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 02/05 | நாள்-2 03/05 | நாள்-3 04/05 | நாள்-4 05/05 | தேதி | நாள்-1 07/05 | நாள்-2 08/05 | நாள்-3 09/05 | நாள்-4 10/05 | நாள்-5 11/05 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 7 | 0 | 0 | 4 |
| 35 | 36 | 35 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 36 | 36 | 36 | 36 |
| 26 | 28 | 29 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 28 | 28 | 28 |
| 2 | 3 | 6 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 4 | 4 | 4 |
| 61-68 | 74-73 | 75-78 | 70-72 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75-65 | 75-65 | 75-65 | 75-65 | 75-65 |
| 7 | 8 | 5 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| கிழக்கு தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு | கிழக்கு தென் கிழக்கு | காற்றின் திசை | தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் தெளிவாக காணப்படும். 08.05.2022 மற்றும் 11.05.2022 வரை மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 °செ முதல் 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படும் லேசான மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கவும். |

| | | |
|---|---|---|
| பசுந்தாள் பயிாகள் | | எதிர்பார்க்கப்படும் லேசான மழையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும். |
| பயறுவகை பயறுகள் | உளுந்து | வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயறுவகை பயறுகளுக்கு நீா் பாய்ச்சுவதை தள்ளிப்போடவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | மாட்டுத் தொழுவத்திற்கு அலுமினியத்தாலான மேற்கூரை இட்டு கால்நடைகளை வெய்யிலின் தாக்கத்திலிருந்து குறைக்கலாம். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படும் லேசான மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கவும்.

**இயக்குநர்**